
## திராவிடத்தால் வாழ்கிறோம்

852

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

13

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

சிறுபான்மையினர் என்றால் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல. இனச் சிறுபான்மையினர், மொழிச் சிறுபான்மையினர் என எந்த வகையில் சிறுபான்மையினராக இருந்தாலும் அவர்களை ஆதரித்து அவர்களின் உரிமைகளுக்குத் துணைநின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். அது தி.மு. கழகத்தில் பிறப்பிலேயே தோன்றிய உணர்வு.

2018-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் மறைந்தபோது, ‘சிறுபான்மையினரின் அரண் சாய்ந்துவிட்டது’ என்ற தலைப்பில் இரங்கல் செய்தி பகிர்ந்தது கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கம். இதன் தலைவரான இனிகோ இருதயராஜ், “சிறுபான்மை மக்களின் உரிமைச் சொத்தே... உன்னை இழந்து தவிக்கிறோம். சிறுபான்மையினரின் பாதுகாவலரே உனது மறைவால் பரிதவித்து நிற்கிறோம். துன்பங்கள் வந்தபோதெல்லாம் அரவணைத்துக் காத்த கலைஞரே, சிறுபான்மை மக்களைப் பிரிந்து சென்றுவிட்டாயே” என உருக்கமாகப் பேசிய காணொளி அவரது தனிப்பட்ட உணர்வு மட்டுமல்ல; ஒட்டுமொத்த கிறிஸ்தவர்களின் உணர்வாகத்தான் இருந்தது.

### இனவெறி இயக்கமல்ல தி.மு.கழகம்!

திராவிடர் கழகத்தில் பிரிந்தும் பேரறிஞர் அண்ணா வெகுமக்கள் பேரியக்கமாக திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கிய போது, கழகத்துக்கு பெயர் வைப்பது குறித்து பெரிய விவாதங்கள், ஆலோசனைகள் நடந்தன. திராவிடம் என்பது கட்டாயம் பெயரில் இருக்க வேண்டுமென்பதில் மிக உறுதியோடு இருந்தார் அண்ணா. ஆனால் திராவிடர் என்பதில் ‘ர்’ விகுதியை நீக்கிவிட்டு ‘திராவிட’ என சூட்டினார் அண்ணா. திராவிடர் என்பது இனத்தைக் குறிக்கும், ஆனால் ‘திராவிட’ என்றால் இந்த நிலத்தொகுப்பை குறிக்கும். இந்த நிலத் தொகுப்பில் வாழும் அனைத்து மக்களும் அதில் அடங்குவர் என்பதற்கான ‘ர்’ விகுதி நீக்கத்திற்கான காரணம்.

பெயரில் கூட அவ்வளவு கவனமாக இருந்த இந்த இயக்கத்தின் மீது இனவெறி இயக்கம் என்றும், மொழி வெறி இயக்கம் என்றும் அன்றைக்கு தூற்றினார்கள். இன்றைக்கும் அந்த அவதூறு பரப்புவோர் உண்டு. அவர்கள் மொழி வெறிக்கும் மொழி உரிமைக்கும் இடையிலான வித்தியாசத்தை உணராதவர்கள். அல்லது திராவிட இயக்கத்தின் மீதான ஒவ்வாமையை இப்படி வெளிப்படுத்தி கொள்கிறார்கள் என்று எடுத்துக்கொள்ளலாம்.

தமிழர் மீது ஆதிக்கம் செலுத்துகிறது என்பதால்தான் இந்தியை எதிர்க்கிறோம். மற்றபடி, எந்த மொழியின் மீதும், எந்த மொழியினர் மீதும் வெறுப்பை உமிழ்ந்திராமல், அன்பை மட்டுமே பொழிந்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை வரலாற்றின் வழி பார்க்கலாம்.

சமீபத்தில் கர்நாடகாவில் இந்தி மொழியில் பேசிய எஸ்.பி.ஐ. வங்கியின் பெண் மேலாளர் ஒருவரை கன்னடத்தில் பேசுமாறு ஒருவர் மிரட்டும் வீடியோ காட்சிகள் வைரலானது. கன்னடத்தில் பேச மறுத்த அந்த பெண் மேலாளர் கண்டனங்கள் வலுத்த பிறகு மன்னிப்பு கோரினார். இதேபோல ஆட்டோ ஓட்டுநர் ஒருவரிடம் வடமாநிலத்தைச் சேர்ந்தவர் கன்னடத்தில் பேச மறுத்த வீடியோவும் பரவலாக கவனம் பெற்றது.

## குரலற்றவர்களின் குரலான கழகம்!



பிழைப்புக்காக வேறு மாநிலங்களுக்குச் செல்வோர் உள்ளூர் மொழியை கற்றுக் கொள்வதுதான் சரியா அல்லது இந்தி மொழியை நாம் கற்றுக்கொள்ள வேண்டுமா என்ற விவாதம் இன்றும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால், அது தொடர்பாக பேரறிஞர் அண்ணா இன்றும் பொருந்தக்கூடிய வரலாற்று உரையை நிகழ்த்தி இருக்கிறார்.”

அகதி என்ற சொல்லே உடன்பாடற்றது; அவர்களை குடிபெயர்ந்தோர் என்றே சொல்ல வேண்டும்” எனக் கூறியவர் அண்ணா. “வாழ்வாதாரத்திற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ குடிபெயர்ந்து வருவோரை, அனுமதிக்காமல் விரட்டுவோம் என்றால், அது மனிதாபிமானமற்ற செயல். ஆனால் அப்படி வருவோர் இந்த நிலத்தின் தன்மைகளைப் புரிந்துகொண்டு, அவர்கள்தான் இதற்கேற்ப தங்களை தகவமைத்துக்கொள்ள வேண்டுமே தவிர, தங்களுடைய ஆதிக்கத்தை இந்த மண்ணில் செலுத்த முற்படக் கூடாது” என்ற தெளிவான பார்வை அண்ணாவிடம் இருந்தது.

குறிப்பாக, சுதந்திர இந்தியாவின் தொடக்கக் காலத்தில், நாடு பிரிவினைக்குபின் தொடக்க காலத்தில் பாகிஸ்தானில் இருந்து தமிழ்நாட்டிற்கு பலர் குடியேறினர். அது பெரும் விவாதத்தை ஏற்படுத்திய நிலையில், “ஏற்கெனவே இங்கு ஒரு சௌகார்பேட்டை உள்ளது. அதைப்போல தமிழர் தொழில், வணிகத்தில் இடையீடு செய்யும் விதமாக அல்லாமல், வாழ்வாதாரத்திற்காக வருவோரை மனிதநேயத்தோடு அணுகி ஏற்றுக்கொள்ளலாம்” என்றார் அண்ணா.

ஆரிய ஆதிக்கம், நம்மீது செலுத்திய ஆதிக்கத்தில் இருந்து கிடைத்த படிப்பினையாகக்கூட அண்ணாவின் கூற்றைக் கருதலாம். ஒருவகையில் தமிழ்நாட்டில் என்ன நடந்து விடக்கூடாது என்று அண்ணா எச்சரித்தாரோ, அதுதான் பாலஸ்தீனத்திற்கு நடந்தது.



> எந்த மொழியினர் மீதும் வெறுப்பை உமிழ்ந்திராமல், அன்பை மட்டுமே பொழிந்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்!

### கலைஞரும் மொழிச் சிறுபான்மையினரும்!

அண்ணா கூறிய அதே சௌகார்பேட்டை மக்களையும் மொழிச் சிறுபான்மையினராக அணுகி, ரக்ஷாபந்தன் நாளில் அவர்கள் கட்டிவிட்ட கயிறை அன்பொழுக ஏற்றுக் கொண்டவர் கலைஞர். முதுமை காரணமாக கலைஞர் படுக்கையில் இருந்த காலத்திற்கு முன்பு வரை நீடித்த பந்தம் இது. மொழிச் சிறுபான்மையினரின் உணர்வுக்கும் மதிப்பளிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் விளைச்சல் அந்த கயிறு.

அதேபோல வட இந்தியர்கள் அதிகம் வாழும் சௌகார்பேட்டையில் வாக்கு சேகரிக்கச் சென்றால் இந்தியில், அவர்களுக்கு தெரிந்த இந்தி மொழியில் துண்டறிக்கைகள் வழங்குவது வழக்கம். அது அவர்களின் வாக்குக்காக அல்ல, அவர்களின் மொழிக்கு தரும் மதிப்பு. நம்மீது திணிக்கப்படாத வரை, ஆதிக்கம் செலுத்தாத வரை இந்திக்கு நாம் எதிரி இல்லை என்பதை உணர்த்தும் உணர்வு.

ஆங்கிலோ இந்தியன் மக்களுக்கு சட்டப்பேரவையில் பிரதிநிதித்துவம் அளிக்கும் வழக்கம் சுதந்திர இந்தியா உருவான காலத்தில் இருந்தே நிலவுகிறது. 1952 முதல் 2021 வரை தமிழ்நாட்டில் 10 ஆங்கிலோ இந்தியர்களுக்கு சட்டப்பேரவையில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. அதிலும் 7 பேர் பெண்கள். ஆனால் இந்த வழக்கத்தை மோடி அரசு தனது இரண்டாவது ஆட்சிக்காலத்தில் முடிவுக்கு கொண்டுவந்தது. இதைப்பின்பற்றி தமிழ்நாடு சட்டமன்றத்தில் முந்தைய அ.தி.மு.க அரசும் ஆங்கிலோ இந்தியர்களுக்கான பிரதிநிதித்துவத்தை நீக்கியது. இதை சட்டமன்றத்தில் அப்போதே எதிர்த்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். இப்படி, மொழிச் சிறுபான்மையினர், குடியேற்றச் சிறுபான்மையினர் என பலருக்காகவும் குரல் கொடுத்து, அவர்களை பிரதிநிதித்துவத்துக்குள் கொண்டு வந்தது கழகம்தான். கலைஞர் தன் ஆட்சி காலங்களில், அவர்களையும் உள்ளடக்கிய பல திட்டங்களை நிறைவேற்றி இருப்பதை வரும் வாரத்தில் பார்ப்போம்.

...நீளும்

## கொடு - எடு நூலகம்
### வாசிப்பு பரவலாகட்டும்!



ஒருவர் ஒன்றை கற்றுக் கொள்வதற்கு எதுவும் தடையாக இருக்கக் கூடாது என்பதற்காகப் புதிய முன்னெடுப்பினை ’கொடு – எடு’ என்கிற பெயரில் நூலகமாகத் தொடங்கியிருக்கிறது தமிழ் இணையக் கல்விக் கழகம். அந்த நூலகத்தில் உள்ள நூல்களை யாரும் சொந்தமாக எடுத்துச் செல்லலாம். அதற்குப் பதிலாக தாங்கள் வாசித்த ஏதேனும் ஒரு நூலை வைக்கலாம். ஒருவேளை நூல் வைக்கவில்லை என்றாலும் ஒரு புத்தகத்தை எடுத்துச் செல்லலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே நீலகிரி மலைப் பகுதியில், இப்படியான முயற்சி சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளது. நீலகிரி மலை கலை முயற்சிகள் என்கிற அமைப்பு, குன்னூர் மற்றும் உதகையில் பல இடங்களில் சிறிய பெட்டியில் நூல்களை வைத்து இது போன்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இந்த முயற்சிக்கு மக்கள் வரவேற்பு அளித்த நிலையில், தமிழ் இணையக் கல்விக் கழகம் சென்னையில் இந்த புதிய முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.

கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள, தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வளாகத்தில் இந்த பெட்டி அமைக்கப்பட்டுள்ளது. அறிவை அனைவருக்கும் பரவலாக்கும் தமிழ்நாட்டு அரசின் முயற்சி இது. இன்று சிறிதாக தொடங்கப்பட்டுள்ள இந்த முயற்சி, பெரும் வாசிப்பு இயக்கமாக வளரட்டும்!

## ஃப்ளாஷ்பேக்



வே.ச.சதாசிவம்

### 103 வயதிலும் கழகப் பணி!

1953-ஆம் ஆண்டு ஜூலை 15 அன்று கல்லக்குடியில் நடைபெற்ற போராட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞரோடு பங்கேற்று கைது செய்யப்பட்டவன் நான். பின்னாட்களில் மொழிப் போராட்டத்திலும் பங்கேற்று சிறை சென்றேன். இன்றைக்கு 103 வயதிலும் கழகப் பணியாற்றி வருகிறேன். 2019-ஆம் ஆண்டு இன்றைய கழகத் தலைவர் அவர்களை குடும்பத்தாருடன் நேரில் சென்று சந்தித்து அவருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டேன்.

– வே.ச.சதாசிவம்,
கல்லக்குடி போராட்ட தியாகி/மொழிப்போர் தியாகி,
பள்ளிக்கரணை, சென்னை

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வரலாறு

### மகளிர் அரசியலுக்குப் பாராட்டும், வரவேற்பும்...

1956-ஆம் ஆண்டு, கழகத்தின் ‘மகளிர் மன்றம்’ அமைந்ததை, கழகத்தின் ஏடான ‘நம்நாடு’ 07.09.1956 அன்று வரவேற்று தலையங்கம் எழுதியது. ‘நமது திராவிடச் சமுதாயம் உரிமை வாழ்வை எய்தவும், வாழ்வின் நல்லியல்புகளைப் பெற்று மகிழ்ந்திருக்கவும், நமது மாதர் குலம் விழித்தெழ வேண்டும். உரிமை வாழ்வின் உயர்வை நம்மவர் இல்லந்தோறும், நல்லவர் உள்ளந்தோறும் குடியேற்ற உடனடியாகச் செயலாற்ற முன்வரவேண்டும்’எனப் பாராட்டி வரவேற்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131